ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

அதிக வெடியிற்காலையிலேயே விழித்துக்கொண்டு கைகால்களை சுத்திசெய்துகொண்டு இஷ்டதெய்வத்தினை தியானம் செய்யவேண்டுமெனக்கூறப்பட்டது. இஷ்ட தெய்வத்தை தியானிக்கும் சக்தியற்றவர்கள் பகவன் நாமங்களையோ அல்லது பகவானின் மங்களகுணங்களை பிரதிபாதிக்கும் திவ்ய ஸ்தோத்திரங்களையோ உறத்தகுரலுடன் உச்சரிப்பது தகுதியாகும். அக்நிக்குஸமஸ்தவஸ்துக்களையும் எரிக்கும் ஸாமர்த்தியம் ஸ்வபாவ ஸித்தமாயிருப்பதுபோல் பகவன்நாமோச்சாரணத்துக்கும் பாபங்களைப்பொசுக்கும் சக்தி இயற்கையாயுள்ளது. நெருப்புச்சுடும் என அறியாதவனையும் எங்ஙனம் நெருப்புச் சுட்டுவிடுமோ அங்ஙனமே 'பகவன் நாமாவின் பாபவிமோசன சக்தியை உணராதவனுடைய பாபங்களையும் பகவான் நசிக்கச்செய்கிறார். ஆகையால் அறிந்தோ, அறியாமலோ, விளையாட்டினாலோ, பயத்தாலோ, த்வேஷத்தாலோ, பகவன்நாமாவை எப்படியாவது ஒருதடவையாவது உச்சரிப்பவன் எந்த வகுப்பில் ஜனித்தவனாயிருந்தாலும் பரிசுத்த மகாபுருஷனேயாவான். பகவன்நாமாவை உச்சரிப்பவன் ஸுராபானம் முதலிய கொடிய தீயசெயல்களினின்றும்கூட விடுதலையடைந்து அதிசீக்ரத்தில் மோக்ஷத்தையுமடைகிறான் என்று கீதாசாரியரும் நிரூபத்திருக்கின்றனர். விசேஷமாக இக்கலியில் வைதிக மார்க்கங்களனைத்தும் இருந்தவிடம் தெரியாமல் நசித்துவிட்டபடியால் பகவன்நாம பஜனம்தான் தற்காலத்தியவர்களுக்கு சுலபமானது. இதனாலேயே, கர்மா, தவம், முதலியவைகளை அனுஷ்டித்து நாமடையும் பிரயோஜனமும் ஸித்திக்கும். பகவன்நாமபஜனம் பண்ணாதவன் ஷட்சாஸ்திரங்களையுமுணர்ந்திருப்பினும் பதிபியேயாவான். விடியற்காலையில் பகவன்நாமாவை உச்சரிப்பதுபோல் புண்யசுலோகர்களாகிய பரிசுத்த பாகவதர்களின் திருநாமத்தையனுஸந்தானம் பண்ணுவதும் நமது முன்னோர்களின் வழக்கம். யோகசாஸ்த்திரத்தில் பரிசுத்தமுள்ள பாகவதர்களை பாவனை பண்ணுவதால் பூஜிப்பவன் மனமும் பரிசுத்தமாகுமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. பகவானைக்காட்டிலும் பாகவதர்களுக்கு மகிமை அதிகமாக உண்டென்று பகவானேபலவிடங்களில்பிரதிபாதித்திருக்கிறார். ஆதலால் மனிதர்களை புனிதர்களாகச்செய்யும் பகவானுடைய திவ்ய நாமதேயங்களையும், பாகவதர்களையும் நாம் அனுஸந்தானம்பண்ணி பாபங்களை நிவர்த்தி செய்துகொள்வோமாக. சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

விபவ-ஹூ மாசி-மீ ௧௨

## மதஸாமரஸ்ய விசாரம்.

ஸம்ஸாரமாகும் தாவானலத்தால் தபிக்கப்பட்ட மகாபுருஷனுக்கே, மோக்ஷத்தையடைய ஆவலுண்டாகும். ஸர்வதுக்க நிவர்த்தியும், பரமானந்த பிராப்தியும்தான் மோக்ஷத்தின் ஸ்வரூபமாகும். அந்தமோக்ஷமும் பிரும்மாத்மதத்வ ஞானத்தால்த்தானுண்டாகும். तमेव विदित्वातिमृत्युमेति, ज्ञात्वा देवं सर्वपाशापहानिः, ज्ञानादेव तु कैवल्यम्, என்ற இவை முதலிய சுருதிகளாலும் மித்யையாகிய அகங்காராதி பிரபஞ்சபந்தத்தின் அதிஷ்டானவஸ்துஞானமாகியவிழிப்பால்ஜாக்ரதவஸ்தையால்சொப்பனம்நிவர்த்தியாவதுபோல் நிவர்த்தி ஏற்படலாம், என்னுமிவை முதலிய பல யுக்திகளாலும் மோக்ஷஞானத்தாலுண்டாகுமென்று ஏற்படுகின்றதல்லவா? கர்மம் உபாஸநம் முதலியவைகளால் சித்தசுத்தியும் ஏகாக்கிரத்தன்மையும் ஏற்படுமேயன்றி, மோக்ஷம் என்பது ஏற்படமுடியாது. ஆதலால் மோக்ஷஸாதனமாகிய ஆத்மதத்வஞானத்தையடைய விரும்பும் தீரர்கள் குருமுகமாக வேதாந்த சாஸ்திரத்தை அடிக்கடி உண்ணும்போதும் உறங்கும்போதும் விசாரிக்க வேண்டும்.

आसुप्तेरामृतेः कालं नयेद्वेदान्तचिन्तया ।

என்ற ஆன்றோர் திருமொழியின்படி வேதாந்தவிசாரத்தை அரைக்ஷணமாவது செய்யாமலிருக்கக்கூடாதென்று ஸித்திக்கின்றது.

घृतमिव पयसि निगूढं भूते भूते च वसति विज्ञानम् ।
सततं मन्थयितव्यं मनसा मन्थानभूतेन ॥

என்றதேவிபாகவதவசனத்தாலும்

परोक्षज्ञानमश्रद्धा प्रतिबध्नाति नेतरत् ।
अविचारोऽपरोक्षस्य ज्ञानस्य प्रतिबन्धकः ॥ என்னும்

வித்யாரண்ய ஸ்ரீ சரணரின் வாக்யத்தாலும், ஆத்மதத்துவாப் ரோக்ஷஞானம் விசாரத்தாலேற்படுமென்பது நன்கு விளங்குகின்றது. ஆதலால் ஞானமின்றிமோக்ஷத்திற்கு வேறுஸாதனமில்லை விசாரமின்றி ஞானஸாதகமும் வேறில்லை. விசாரமென்பது "நான் யார்" "ஜகத்து யாது" "ஈசுவான் யார் என இம்மூன்றுவஸ்துக் களின் ஸ்வரூபத்தை நிச்சயித்துகொள்வது தான்.

कोऽहं कथमिदं जातं को वा कर्तास्य विद्यते ।
उपादानं किमस्तीह विचारस्सोऽयमीदृशः ॥

என்னுபகவத்பாதவசனத்தாலும் ஜகத்ஸ்வரூபம் பிரும்மம் ஆத்மா இவைகளை விசாரிக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது.

ப்ரும்மத்தை விஸ்தாரமாய் எடுத்துரைக்கும் வேதாந்தங்களை விசாரிப்பதுதான் உத்தமமாகும், எனெனின் பிரும்மத்தைபரிவிக்கும் பிரமாணம் வேதாந்தங்களேயாகும், வேதாந்தங்களால் மட்டிலும் அறியக்கூடிய பிரும்மாத்மதத்வத்தை கர்மகாண்டம், ஸாங்கியம், காணதம் நியாயம்முதலிய சாஸ்திரங்களை விசாரித்து எப்படி தெரிந்துகொள்ள முடியும்? ஆதலின் "ஸாங்க்யம் முதலிய மதங்கள் முமுக்ஷுக்குபயோகமுள்ளவைகளல்ல. வேதாந்தங்களின் ஸித்தாந்தத்தை உண்மையாக வெளியிடும் வ்யாஸாசார்யாளின் மதத்தை யவலம்பித்து மோக்ஷமடைய பிரயத்தினமெடுத்துக்கொள்வதுதான் ஸுலபமார்க்கமென்பது நமது துணிபு. இவ்வியாஸாசார்யாளின் பிரும்மஸூத்திரங்களையும் உபநிஷத்துக்களையும் பிரமாணமாகக்கொண்டு உண்டாயிருக்கும் பலவகைப்பட்ட மதங்களுள் உபநிஷத்துக்களின் விஷயத்தில் அத்வைதிகளுககு எவ்வளவு பிராமாண்யமுண்டோ அவ்வளவு விசிஷ்டாத்வைதிகள், த்வைதிகள் முதலியவர்களுக்குமுண்டு. ஆயினும் அத்வைதிகள் அவ்வேதாந்த ஸித்தாந்தத்தைத்தெளிவாய் எடுத்து விளக்குவதற்கும் தங்கள்ஸித்தாந்தங்களை ஸ்தாபிப்பதற்கும்சுருதியையே விசேஷமாய் பிரமாணமாக எடுத்துக்கொள்வார்கள். த்வைதிகளோ விசேஷமாய் புராணங்களை மேற்கோளாக எடுத்துக்கொள்வதும் வேதார்த்தங்களை வெளியிடும்போது தனது சொந்த அபிப்பிராயத்தைக்கலந்து கொள்வதும் வழக்கம். ஆகையால் அத்வைதமதத்தில் கொஞ்சம் நியாயமிருக்கலாமென்று புலப்படுகின்றது. உபநிஷத்துக்களிலும் பிரும்மஸூத்திரங்களிலும், எல்

லாருக்கும் பொதுவான அம்சம் அமைந்திருப்பது அலங்காரமே யாகும். உபநிஷத்துக்களினுண்மைகளையுறைக்கும் அத்வைதம் நமது அனுபவத்திற்கு நெருங்கியதாகும். இவ்விதம் நாஸ்திக ஷட் தர்சனங்களுக்குள்ளும், ஆஸ்திக மதத்தினுள்ளும் வ்யாஸாசார்ய மதமே மஹிமையுற்றதென்பது நிச்சயம். வ்யாஸாசாரியாளின பிப்பிராயத்தையே ஸ்தாபிப்பதற்காக மற்ற ஆஸ்திகமதங்களும், நாஸ்திகமதங்களுமேற்பட்டன. எப்படியென்றால் வேதங்கள் பிரமாணங்களல்ல. பரலோகம் கிடையவே கிடையாது. ஜீவனும் ஈச்வரனும் இல்லையென்று கலிமகிமையால் துர்மதங்கள் ஆறு தோன்றவே அத்துர்மதவாதிகளை ஜயித்து வெற்றிபெறவேண்டி ஆஸ்திகர்களாகிய கபிலர், கணாதர், கௌதமர், பதஞ்சலி, ஜைமினி, வ்யாஸர், இவ்வறுவர்களும் ஷட் தர்சனங்களாகும் அஸ்திரங்களை பிரயோகம் செய்தார்கள். ஆஸ்திகர்களுக்கு நாஸ்திகர்களை ஓட்டிவிடுவதில்தான் முக்கியநோக்கம். ஆஸ்திகர்களோ அல்லது நாஸ்திகர்களோ? மோக்ஷத்தை ஜீவர்களனுபவிப்பதற்காகத்தான் தமது மதங்களை ஏற்படுத்திக்கொண்டனர். மோக்ஷத்தையொப்புக்கொள்ளாத மதமொன்றும் கிடையாது. ஆனால் அதன் ஸ்வரூபத்திலும் அதன்ஸாதந ஸ்வரூபங்களிலும்தான் அவரவர்களுக்கு அபிப்பிராய பேதம். நாஸ்திகர்ளுக்கும் ஆஸ்திகர்களுக்கும் பரஸ்பரமுள்ள கண்டநப்ரதிகண்டனங்களில் தாத்பரியமுள்ளவர்களல்ல. ஆகவே இனி நாஸ்திக தர்சனங்களையும் ஆஸ்திக தர்சனங்களைம் கிரமமாக விஸ்தாரமாய் விசாரிப்போம். அதிலும் முதலாக விரோதி நாஸ்திகமதங்களை நிரூபிப்போம். சிரந்த வேதாந்தங்களை பிரமாணமாகக்கொண்ட நாம் நாஸ்திகமதங்களை எதற்காகத் தெறிந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கலாகாது. நாஸ்திக மதங்களிலிருந்தும் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய தத்துவங்கள் பல உள. மதத்தில் சிறிதேனும் நம்பிக்கையின்றி மரம், பக்ஷி, மிருகம் முதலியவைகளுக்கு ஸமமாகவிருக்கும் புருஷாதமர்களைக்காட்டிலும் நாஸ்திகமதங்களே மேலானவை என்று நம்பிக்கைவைத்து அம்மததத்வங்களில் சிலவற்றையாவது உள்ளபடியுணர்ந்து அனுஷ்டிக்க தைரியம் வாய்ந்த நாஸ்திகர்கள் உத்தமர்களேயாவார்கள். நாஸ்திகர்களென்று நாஸ்திகர்களை இகழ்ச்சியாய்க்கூறும் யோக்யதை ஜனங்களுக்கு தற்போது அகன்றுவிட்டது. ஏனெனின் மதங்களனைத்தும் தற்காலத்தில் சீர்கெட்டு

நிற்பதால் எப்படியொரு மதஸ்தர்களை மற்ற மதஸ்தர்கள் ஏளனம் பண்ணக்கூடும். ஷட்தர்சனக்காரரனைவரும் ஸர்வக்ஞரே. அப்படியிருந்தும் பரஸ்பரம் விருத்தஸித்தாந்தவாதிகளாகவிருப்பதற்குக் காலதேசவர்த்தமானத்துக்குத் தக்கபடியவலம்பித்த வெளிப்பேச்சுகளே தவிர ஸ்வமதப்பிடிவாதத்தாலன்று. காலதேசவர்த்தமானங்களையனுசரித்துப் பேசுவது ஸர்வக்ஞர்களாகிய இவர்களுக்கு வழக்கமுண்டு. நாஸ்திகர்களையும் ஆஸ்திக தர்மமார்க்கத்தில் திருப்பும்படி செய்வதுதான் இவர்களின் முக்கிய நோக்கம். இனி சார்வாகன் மாத்திமிகன், யோகாசாரன், ஸௌத்ராந்திகன், வைபாஷிகன், திகம்பரன் என்னும் அறுவகை நாஸ்திகர்களின் மதங்களை நிரூபிக்கத்தொடங்குவாம். அதிலும் முதலில் "தேகாத்மவாதிசார்வாகமதஸ்வரூபத்தை" விசாரிப்போம்.

ஆராயப்புகும் சார்வாகமதம் நான்குவிதம், இத்தூலதேகத்தையாத்மாவாகக் கூறும் மதமொன்று. சக்ஷுஸ் முதலிய இந்திரியங்களையே ஆத்மாவாகச் சொல்லும் மதம் இரண்டாவது, பிராணனையே ஆத்மாவாக ஒப்புக்கொள்ளும் மதம் மூன்றாவது, மனதினையே ஆத்மாவாக அங்கீகரிக்கும் மதம் நான்காவது. அதில் ஸ்தூலதேகத்தை ஆத்மாவாகக்கூறும் சார்வாகனின் ஸித்தாந்தத்தைக் கவனிப்போம். தேகாத்மவாதியின் மதத்தில் இத்தூலதேகமே ஆத்மாவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களின் அபிப்பிராயமாவது மதவாதிகள் யாவரும் "நான், நானெனும்" தோற்றத்திற்கு விஷயமாகவிருப்பது எதுவோ, அது ஆத்மாவென்று ஒப்புக்கொண்ட விஷயம். நானெனும் தோற்றமோ? பண்டிதர்முதல் பாமரர்களீறாக, உள்ள யாவருக்கும் "நான் ஸ்தூலன், நான் மெலிந்தவன், நான் பிராமணன், நான் நடப்பவன், நான் இச்சிப்பவன், நான் செய்பவன்" என்னும் தோற்றமிருப்பதால் சரீரத்தில்தான் ஏற்படுகின்றது. ஆகவே ஸ்தூலசரீரமே ஆத்மாவாக ஸித்திக்கின்றது. ஏனெனின் ஸ்தூலத்வம், இளைப்பு, பிராமண்யாதிபேதங்கள், நடைமுதலிய கிரியைகள் இவையாவும் சரீரத்திலுள்ளவைகளென்பது பிரத்யக்ஷம். இப்படியே ஞானம், இச்சை, முயற்சி, இவை முதலிய தர்மங்களும், ஸ்தூலதேகத்தினுடையதேயாகும். பிருதிவி, ஜலம், தேஜஸ், வாயு எனுமின் நான்குபூதங்களில் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக ஞானம் காணக்கிடைக்காவிட்டாலும் தேகாகாரமாக பரிணமித்த அன்

நான்குபூதங்களிலிருந்து ஞானம் என்னுமறிவு உண்டாகலாம். ஆதலின் சைதந்யம் தேகதர்மமேயாகும். சார்வாகமதத்தை இயற்றிய பிருஹஸ்பதிபகவானும் “ चैतन्यविशिष्टः पुरुषः कायः ” எனுமிச்சூத்திரவாக்யத்தால் தேகத்தையே ஆத்மாவாகக் கூறியிருக்கின்றனர். ஆகையாலும் தேகமே ஆத்மாவாம். இந்த ஸ்தூலதேகத்திற்குண்டாகும் மரணமே மோக்ஷமெனப்படும். பிரத்யக்ஷமொன்றே பிரமாணமாகும். பிரத்யக்ஷத்தினும் வேறான அநுமானம் முதலியவை பிரமாணமன்றாம். இக்காரணத்தாலேயே ஸ்வர்கம், நரகம், வைகுண்டம், கைலாஸம்முதலிய பரலோகங்களும் கிடையாது. இவ்வுலகமனைத்தும் ஸ்வபாவமாகவே உண்டாகின்றது. ஸ்வபாவத்தைக்காட்டிலும் வேறான ஈசுவரன் அதிருஷ்டம் முதலியவை இந்தவுலகத்துக்குக் காரணமாகமாட்டாது. தேகாத்மவாதிகள் தமது மதம் சுருதிஸித்தமென நிரூபிப்பதற்கு स वा एष पुरुषोऽन्नरसमयः என்னுமிச்சுருதியையும் ஆதாரமாகக் காட்டுகின்றனர். இதுவரையில் தேகாத்மவாதிசார்வாகமத ஸ்வரூபத்தை நிரூபித்தோம். இனி இவர்களின் மதம் அஸங்கதமென நிரூபிக்கத் தொடங்குவாம். சுபம்.

ப–ர்.

# பக்தியோகம்.

பிரியவாசகர்களே !

பக்தியோகத்தின் ஸ்வரூபத்தை விவரணம் செய்யவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறேன். பலர் இவ்விஷயத்தைப்பற்றி எழுதி இவ்வார்யதர்மபத்திரிகைவாயிலாக வெளியிட்டுமிருக்கிறார்கள். அவ்விதமிருந்தாலும் அதின் சில ரஹஸ்யாம்சங்களைத்தெரிவித்துக்கொள்வதற்காக நானும் அதேவிஷயத்தில் பிரயத்தினம் எடுத்துக்கொண்டனம். ஆகையால் “அடிக்கடி சர்விதவிஷயமிஃதென” வாசிப்பதற்கு மனஞ்சலியாமலிருக்குமாறு வணக்கமாய்ப் பிரார்த்திக்கின்றேன். பக்தியோகமாவது அதிக விசுவாஸத்துடன் பகவானை அடையும்பொருட்டு செய்யப்படும் விடாமுயற்சியேயாகும். பகவானுடைய பாதாரவிந்தங்களில் செலுத்துமளவற்ற அன்பே பக்தியெனப்படும். மோக்ஷத்தையடைய கர்மயோகம்,

ராஜயோகம், ஹடயோகம் முதலியவைகளைக் காட்டிலும் பக்தி யோகமே சிரேஷ்டமானதாகும். கர்மயோகம் முதலியவைகள் மோக்ஷத்தைத்தவிற வேறு ஸ்வர்க்கம் முதலிய பயனையும் நாடியே பிரவர்த்தித்து இருக்கின்றன. பக்தியோகமோ தானே உபாயமும் பலனுமாம். பக்தியைக் குறித்து அனேக கிரந்தங்களை எழுதியிருக்கும் நாரதர், சாண்டில்யர், இவர்கள் தவிற ஞான யோகத்தை விரிவாய் வெளியிட்டிருக்கும் வேதாந்த ஸூத்திர பாஷ்யகாரர்களும்கூட பக்தியோகத்தைப் புகழ்ந்துபேசியிருக்கிறார்கள். உண்மையை ஆராயப்புகுங்கால் ஞானயோகத்துக்கும், பக்தியோகத்துக்கும் முடிவில் அவ்வளவு பேதமில்லை என்று சொல்லலாம். இவ்விரண்டு மார்க்கங்களும் முடிவில் ஒரே இடத்தில் வந்து கூடுகின்றன. மோக்ஷத்தைக்கருதி பக்திமார்க்கத்தை யனுஸரிப்பவன் ஞானமார்க்கத்தில் வந்துசேர்ந்துவிடுகிறான். ஆனால் ஆரம்பதசையில் தனக்கிஷ்டமான தெய்வத்தினிடமிருக்கும் வாத்ஸல்யத்தால் இதா தெய்வங்களை நிந்திக்கும் ஸ்வபாவம் உதிக்கும். இவ்வித அபாயம் பக்தியோகாரம்பத்தில்தானுண்டு. பக்தியோகம் முதிர்ந்துவிட்டால் த்வேஷத்துக்கு இடங்கொடாது. இவ்விதமுதிர்ந்த பக்திமானே பகவானையுண்மையாக உணர்ந்தவனுவான். ராகத்வேஷமற்ற பகவானைத் தரிசித்தபின் அவனிடம் த்வேஷம் எப்படி அணுகமுடியும்? கர்மம், பக்தி, ஞானம் இம் மூன்றுமெவனிடம் தங்கியிருக்கின்றனவோ, அவனே உயர்ந்தவனென்பதில் ஐயமில்லை. ஆனால் இவையெல்லாம ஒவ்வொருவருக்குமமைந்திருக்கமுடியாது. இப்பிரபஞ்சத்தில் ஸகல நற்குணங்களும் ஒருவனிடமமைந்திருக்கமுடியாது. இம்மூன்று மார்க்கங்களையும் ஸமாஸமாக அனுஸரிக்க சக்தியற்றவர்களுக்கு பக்தி மார்க்கம்தான் தகுந்தவுபாயம். கர்மமென்பது இந்திராதிதேவர்களைக்குறித்து செய்யப்படும் ஹோமம் முதலிய காரியங்களேயாம். கர்மாக்களால் ஆராதிக்கவேண்டிய தேவதைகளிடமும் விசுவாசம் அவசியம் தேவையானதே. சுருதிகளில் அத்வர்யு ஹோமம் செய்யும்போது தேவதையை த்யானித்துக்கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கின்றன. இதுவேதான் பக்தி யோகமும், ஆதலின் பக்திக்கு கர்மயோகத்திலும் ஸம்பந்தமுண்டு கர்மிக்கும் பக்தனுக்கும் அதிக வேற்றுமை இல்லாததுபோல் ஞானிக்கும் பக்தனுக்கும் அதிக பேதம் கிடையாது. ஒருவ

னுக்கு பரமபக்தியுதயமாகுங்கால் பரிபூர்ணஞானமும்தானே தோன்றிவிடும். பகவானையறிந்தபின்பு பகவானிடம் உண்டாகு மன்புக்கும் அதற்கும் அதிக பேதமில்லை. ஞானிக்கும் பகவானிடம் பக்தியுண்டாகும். இவ்விஷயத்தைப் பிறகு விஸ்தாரப் படுத்துவாம்.

பக்தியோகம் ஸாதநஸாத்யரூபமாக இருவிதமாயுள்ளது. பக்தியே ஸாதநமாயும், பலமாயும் இருக்கின்றது. உபாயபக்தி யோகத்தையே உபாஸநமென்றும் தியானமென்றும் சொல்வதுண்டு. உபாஸனம் என்னும் சொல்லுக்கு பகவத்பாதாள் आवृत्तिरसकृदुपदेशात् என்ற அதிகரணத்தில் गुरुमुपास्ते, राजानमुपास्ते, ध्यायति प्रोषितनाथापतिम् என்ற வாக்கியங்களால் வாக் மன:காயங்களால் குருவுக்குப் பணிவிடை செய்வதுதான் குரூபாஸநமென்றும் பதிவ்ரதையானவள் வெளியிற்சென்ற கணவனையே அடிக்கடி நினைத்துக்கொண்டிருப்பதே பதியினுபாஸநமென்றும் திருஷ்டாந்தமூலமாக பக்தியையும், உபாஸநத்தையும் ஒன்றென திடப்படுத்தியிருக்கிறார்கள். பகவத்ராமானுஜாசார்யாளும் இதே அதிகரணத்தில் இதேமாதிரி ஸித்தாந்தம் பண்ணியிருக்கிறார்கள். அதாவது தியானமென்பது இடைவிடாமல் தைலதாரைபோல் ஒரே வஸ்துவை ஸ்மரித்துக்கொண்டிருப்பதுதான். இவ்வித ஸ்மரணம் பகவானைப்பற்றிக்கொண்டிருக்குமாயின் பவபந்தங்களனைத்தும் பறந்துபோகும். இக்கருத்தைக் கொண்டுதான் சுருதிகளெல்லாம் தியானத்தால்தான் மோக்ஷம் ஸித்திக்குமென முறையிடுகின்றன. தியானத்திற்கும் ஞானத்துக்கும் வித்யாஸம் கிடையாது. ஈசுவராநுக்ரஹம்பெற்றவனுக்கு ஈசுவரன் தானே தன்னையடையும்பொருட்டு அநுகூலம் பண்ணுகிறதாகவும் சுருதி ஸித்த விஷயம். எவன் என்னை அநுதினம் ப்ரேமையுடன் பஜிக்கின்றானோ அவனுக்கு என்னையடையும் மார்க்கத்தை நான் காட்டுவேன் என்று ஸ்ரீ பகவானும் அபிப்ராயப் படுகிறார். இவ்விதம் ஈசுவரனை தியானிப்பதே பக்தியெனப்படும் என்று, பாதஞ்சலயோகஸூத்ரத்தில் ईश्वरप्रणिधानाद्वा என்ற ஸூத்திரத்தில் போஜமகாராஜரும் பயனைக்கருதாது பகவானையோ, பரமகுருவையோ பணிவிடைசெய்வதே பிரணிதானமாகுமென பிரணிதானபதத்துக்குப் பாவார்த்தத்தை வெளியிட்டிருப்

பதாலும் "பிரணிதானமாவது பகவானுடைய கிருபையையடையக் கூடிய பக்தியேயாகும்" என்று அப்பதத்தின் அர்த்தத்தை வெளியிட்ட வ்யாஸாசார்ய பாஷ்யத்தாலும் தியானமே பக்தியென்பது ஸித்தம். சாண்டில்யமகரிஷியானவர் ईश्वरे दृढानुरक्ति-र्भक्तिः என்ற ஸூத்திரத்தால் "ஈசுவரனிடத்தில் நிரதிசயவிசுவாஸம் வைப்பதே பக்தி" என்று தன்னபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். ஈசுவரனைத்தவிர மற்ற வஸ்துக்களில் வைக்கும் விசுவாஸம் பக்தியாகமாட்டாதென்பது இவரது அபிப்பிராயம். சாண்டில்யர் சொன்ன கீழ்க்கண்ட பக்திலக்ஷணத்தில் "அனுரக்தி"பதத்துக்கு ஸ்வப்னேச்வர வ்யாக்யானத்தில் அனு = பிறகு, ரக்தி = அன்பு என்று பிரித்து தியானத்தால் பகவானுடைய மஹிமையையறிந்தபின்பு செய்யுமன்பென அர்த்தம் கூறியிருப்பதைக் கவனித்தால் தியானமே பக்தியென்றும் ஆனல் ஆரம்பத்தில் அது உபாஸ்திரூபமாகவும், முடிவில் விசுவாஸமாகவும் பரிணமிக்கின்றது என்ற அம்சம் நன்கு புலப்படுகின்றது. பக்திமார்க்கத்தை பிரதானமாய் பிரதிபாதிக்கவேண்டியே ஏற்பட்டுள்ள ஸ்ரீமத்பாகவதத்தில் பக்தியை "பரபக்தி" என்றும், "அபரபக்தி" என்றும் இரண்டாகப் பிரித்து இவ்விருவித பக்தியும் ஒன்பதுவிதமென நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியே சில கிரந்தங்களில் நான்குவிதமாகவும், சில கிரந்தங்களில் பதினன்குவிதமாகவும், எழுவிதமாகவும், பலவிதமாக பக்தி பிரித்துக்கூறப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் அவர்களும்

ध्यानपराह इतिचेच्छ्रुणु तृतीयः प्रागेव मातरसमाकलितोऽभ्युपायः।

என்ற சுலோகத்தால் தியானமே பக்தியென ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். இவ்வாற்ருல் தியானமே பக்தியின் ஸ்வரூபமென்பது ஸித்தம். பகவானை தியானம் பண்ணுவது ஸுலபமன்று. அசுத்தமனமுற்றவர்கள் பகவானை தியானிக்கமுடியாது. மனதை பிராணுயாமம்முதலிய ஸாதநாப்யாஸத்தால் அடக்கிஸ்வவசப்படுத்திக்கொள்ளாதவனுக்கு மனம் சுத்தமாகமாட்டாது. இதுவே நாம் முதலில் செய்யவேண்டிய வேலையாகும். இதுவும் ஸுலபமன்று, "சிந்தையடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" என்று தாயுமானஸ்வாமிகள் கூறியபடி மிகவும் கடினமேயாகும். விஷயவைராக்யத்தால் பிரும்மலோகம்வரையி

லுள்ள விஷயபோகத்திலாசையையடையாமல் ஐந்து இந்திரியங்கள்வாயிலாக பாஹ்யஸாரமற்ற விஷயங்களில் செல்லும் மனோவிருத்தியை நீண்டகால அப்யாஸத்தால் அடக்கி பகவதாகாரமாகச் செய்துகொள்வதே மனோநிக்ரஹமாகும். இது ஸித்திக்காதவரையில் வேறெவ்வித முயற்சியும் வீணேயாகும். ஆதலால் முதலில் மனம் பரிசுத்தமடைவதற்கேற்ற ஸாதநங்களை அனுஷ்டிக்கவேண்டும். ஸங்கல்பவிகல்பவடிவமாகிய மனம் பந்தத்துக்கும், மோக்ஷத்துக்கும் காரணமென்று கூறும் ஸ்மிருதிகள் பல உள. சுத்தமனம் மோக்ஷத்துக்கும், அசுத்தமனம் பந்தத்துக்கும் காரணமாகும். மனதை சுத்திசெய்துகொள்வதற்காகவே யோகசாஸ்திரத்தில் யோகாப்யாஸமும், அஹிம்ஸை, சௌசம் முதலிய யமநியமாதிகளும் விஸ்தாரமாய்க் கூறப்பட்டுள்ளன. மனதிற்கு க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்ரம், நிருத்தம் என ஐந்து அவஸ்தைகளுண்டு. க்ஷிப்தமென்பது ராகத்வேஷமூலமாக எப்போதும் விஷயங்களையே பற்றிக்கொண்டிருப்பது, அடிக்கடி தூக்கம்,சேம்பல் முதலியவைகளோடு கூடியிருப்பது மூடமாகும். விஷயங்களையே பற்றிக்கொண்டிருக்கும் மனம் ஏதாவதொரு ஸமயத்தில் பகவானையும் தியானிப்பது விக்ஷிப்தமெனப்படும். எப்போதும் ஆதரவுடன் ஓரே வஸ்துவை தியானிப்பது ஏகாக்ரமாகும். அப்யாஸமகிமையால் பகவானுடன் இரண்டறக் கலந்து நிற்பதே நிருத்தமென்பர். இவ்வைந்து அவஸ்தைகளில் க்ஷிப்தம் மூடம் இவ்விரு அவஸ்தைகளை மனம் அடையும்போது சித்தமடங்கமாட்டாது; ஸமாதியும் ஸித்திக்கமுடியாது. ஏனெனின் மனம் ஸத்வம், தமஸ், ரஜஸ், என்ற முக்குணவடிவமாகும். இம்மூன்று குணங்களாலேயே மனதிற்கு ஐந்து அவஸ்தைகளேற்பட்டன. இதில் ரஜஸ், தமஸ், இவ்விரு குணங்கள் மேலிடுங்கால் க்ஷிப்தமூடவிக்ஷிப்தாவஸ்தைகளும் ஸத்வம் மேலிடும்போது ஏகாக்ரநிருத்தாவஸ்தைகளும் உண்டாகின்றன. விஷயங்களில் ஆசை வைப்பது ரஜோகுணகார்யம், தூக்கம் முதலியவைகள் தமோகுணகார்யம். க்ஷிப்தமூடாவஸ்தைகளில் ரஜோகுண தமோகுணகாரியமாகிய விஷயாசை தூக்கம் முதலியவைகளிருப்பதால் தியானம் ஸித்திக்கமாட்டாது. விக்ஷிப்தாவஸ்தையில் ஏதோ ஒரு ஸமயத்தில் பகவத்தியானமிருந்தாலும் விஷயாசையே அதிக காலமிருப்பதால யோகஸித்தி இல்லை. எப்படி காற்றடிக்குமிடத்

தில் ஏற்றிவைக்கப்பட்ட தீபம் நீண்டகாலம் இருக்காதோ, அப்படியே அறைநொடிநேரம் செய்யும் பகவத்தியானதீபமும் விஷயாசை என்னும் பெருங்காற்றுநடுவில் நீண்டகாலம் ஜ்வலித்துக் கொண்டிருக்கமுடியாது. ஆகவே இம்மூன்று அவஸ்தைகளிலும் தியானம் ஸித்திக்காததுபற்றி யோகமாகமாட்டாது. ஏகாக்ரம் என்னும் நான்காவது அவஸ்தையில் மனம் ஸத்வகுணப்ரதான மாகவிருக்கும். ஆதலின் ரஜோகுண தமோகுணகாரியங்களாகிய விஷயாசை, தூக்கம்,லயம்முதலியவை ஏற்படமாட்டாதாகையால் பகவதாகாரமாகவே மனம் நிலைபெறும். இந்த அவஸ்தை யோக மாகும்; இவ்வவஸ்தையை ஸம்பிரக்ஞாதஸமாதி என்றும், யோக சாஸ்திரத்தில் கூறுவது வழக்கம். இவ்வவஸ்தையில் பகவானுடைய ஸ்வரூபமும், பக்தனுடைய ஸ்வரூபமும் தோன்றும். பகவானுக்கும் பக்தனுக்கும் இந்த ஸமாதியில் பேதம் புலப்படும். நிருத்தாவஸ்தையில்பேதலேசங்கூட கிடையாதென்பதுதான் வித்யாஸம். இதனால் இந்திரியங்களையும், மனதையும் அடக்காதவனுக்கு பகவத்தியானம் கிட்டாது என்பது ஸித்தமானபடியால் நாமும் கொஞ்சங்கொஞ்சமாக விஷயங்களில் ஆசையை ஒழித்து குருமுகமாக யோகசாஸ்திரரஹஸ்யங்களையுணர்ந்து யோகாப்யாஸம் செய்து சித்தசாந்தியையடையவேண்டும். பக்தியின் பெருமையை எடுத்துறைக்கும் பாக்யம் பிரியவாசகர்களின் விசுவாஸத்தால் அடிக்கடி ஏற்படுமாறு வேண்டுகிறேன்.

V. ஜகதீச்வரசாஸ்திரிகள்,
ஸநாதநதர்மோபன்யாஸகர்.
ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்,
கும்பகோணம்.

---

ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடம் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள்
தேவஸ்தானம் விபவ வருஷத்திய

# பிரம்மோத்ஸவ மகோத்ஸவ பத்ரிகா.

सुधामप्यास्वाद्य प्रतिभयजरामृत्युहारिणीं
विपद्यन्ते विश्वे विधिशतमखाद्यादिविषदः ।

करालं यत्क्ष्वेलं कवलितवतः कालकलना
न शम्भोस्तन्मूलं तव जननि ताटङ्कमहिमा ॥

श्रीभगवत्पादाः ॥

त्रियम्बककुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमिन्दिरां
पुलिन्दपतिसुन्दरीं त्रिपुरभैरवीं भारतीम् ।
मतङ्गकुलनायिकां महिषमर्दिनीं मातृकां
फणन्ति विबुधोत्तमाः विहृतिमेव कामाक्षि ते ॥

श्रीमूकाचार्याः ॥

विश्वकारणनेत्राभ्यां महात्रिपुरसुन्दरीम् ।
बन्धकासुरसंहर्त्रीं कामाक्षीं तामहं भजे ॥

श्रीव्यासाचार्याः ॥

ஸ்ரீமஹாமேரு சிகரத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீபுரவாஸினியாய் பஞ்சப்ருஹ்மாகார மஞ்சத்தில் ஸ்ரீகாமேச்வராங்க பரியங்கத்தில் வீற்றிருப்பவளாய் பிரபஞ்சஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹாரங்களைச் செய்கின்ற பிரம்ம விஷ்ணு ருத்திராதிகளுக்கு அவ்வித சக்தியைக்கொடுத்து ஆக்ஞை செய்யும் பஞ்சகிருத்திய பாராயணியாயுமுள்ள பராசக்தியான ஸ்ரீலலிதாமஹாத்ரிபுரஸுந்தரி தேவியானவள் இப்புவியிலுள்ள ஆன்மகோடிகளுக்கு தர்மாதி ஸகலபுருஷார்த்தங்களையும் அனுக்கிரஹிக்குமாறு அகில பூமண்டலாலங்காரமாயும் ஸ்ரீஹரிஹராதி ஸமஸ்த தேவதைகளின் ஸாந்நித்யம் பெற்றதும் த்ரயஸ்திரும்சத்கோடிதேவதா ஸேவிதமாயும் இப்பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்தபுண்ணியக்ஷேத்திரங்களுக்கும் பிரதானமாயுமிருக்கின்ற ஸ்ரீகாஞ்சிக்ஷேத்திரத்தில் ஸ்ரீருத்திரகோடியில் ஸ்ரீஏகாம்பரநாதரென்று புகழப்பட்டு வருகிற ஸ்ரீமஹாகாமேச்வரஸ்வரூபிணியாயும் ஸ்ரீபுண்ணியகோடியில் ஸ்ரீவரதராஜரென்று ஸ்துதிக்கப்பட்டுவருகிற மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயும் "ஸ்ரீகாமகோடியில்" பிலாகாசரூபிணியாயும் கன்னிகாரூபிணியாயும் விசேஷமாய் தன்னுடைய ஸமஸ்த ஆவரண சக்திகளுடன் யந்திரரூபிணியாயும் விளங்காநிற்க

श्रीकाञ्च्यां कामकोटिं कलिमलशमनीं कल्पयित्वा सुरेशे
श्रीविद्याराजपीठार्चनमहितमहाराज्यसाम्राज्यलक्ष्मीम् ।

61. 649



என்று மார்க்கண்டேய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடி ஜகத்குரு ஸ்ரீமச்சங்கரபகவத்பாதாசார்யவர்களால் உத்தாரணம் செய்யப்பட்ட ஸ்ரீகாமகோடிஸ்ரீசக்கிரத்தில் ஸாந்நித்தியமடைந்து விளங்கும் ஸ்ரீகாமாக்ஷிதேவிக்கு நாளது விபவஹு மாசிமீ 2உ க்கு 1929ஹு பிப்ரவரிமீ 13உ சௌமியவாரம் முதல் விசேஷ மஹோத்ஸவம் வேதபாராயணாதி சந்தர்ப்பணை வைபவங்களோடு உபக்கிரமித்து 11-நாள் உத்ஸவங்கள் நடந்தேறியபின்

ततः प्रयाते कल्याणी कल्पे सावित्रनामके ।
स्वायम्भुवमनोः काले तमसि प्रथमे शुभे ॥
युगे कृताख्ये वैकुण्ठ मोहिनीरूपसंयुते ।
श्रीमुखाब्दे फाल्गुनाख्ये मासि कुम्भगते रवौ ॥
तत्कृष्णपक्षप्रथमाशुक्रवारारुणोदये ।
मध्याह्ने पूर्वफल्गुन्याः कन्यका रूपशालिनी ॥
ललिता राजराजेश्वरी महात्रिपुरसुन्दरी ।
स्वस्वरूपं समासाद्य बभौ सिंहासने शुभे ॥

என்று மார்க்கண்டேய புராணத்தில் ஸ்ரீகாமாக்ஷி விலாஸத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்ரீஜகன்மாதாவினால் தேவர்களுக்கு தந்தருளப்பட்ட திவ்யசேவையாகியவிசுவரூபதரிசனமும் அன்று முதல் வழக்கம்போல் விடயாற்றி உத்ஸவங்களும் நடக்கிறபடியால் அக்காலங்களில் ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து ஸ்ரீகாமாக்ஷி திவ்விய மங்கள மூர்த்தியை தரிசித்து ஐஹிகாமுஷ்மிக பல புருஷார்த்தங்களையும் ஜன்மஸாபல்யத்தையும் அடையுமாறு கோருகின்றனம்.

K. குப்புஸாமி அய்யர்,

ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் ஆதீன தர்மகர்த்தர் அவர்களாகிய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஸ்ரீகார்யம் ஏஜண்டு (கும்பகோணம்.)

T. S. ராஜா அய்யர்,

மானேஜர்,

ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் & எஸ்டேட்ஸ், காஞ்சீபுரம்.

# திருக்கோவிலூர் பிராமணஸபை.

(64-வது பக்கத்தொடர்ச்சி.)

இந்த தீர்மானங்கள் நிறைவேறியபிறகு ப்ரும்மஸ்ரீ ஸோம தேவசர்மா அவர்கள் நாசிகேதசயனம், யக்ஞஸ்வரூபம் என்பவைகளைப்பற்றி விரிவாக உபன்யஸிக்கும்போது புத்திரர் கடமை, தானமஹிமை, அதிதிபூஜாவிசேஷம் முதலியவைகளை 2-மணி ஸாவகாசம் விரிவாகப்பேசினர். பின்னர் தலைவர் ஸபைநடத்திய சிறப்பைப்பற்றி பலர் வந்தனோபசாரங்கூற, அக்ராஸனாதிபதி இத்தீர்மானங்களை நிறைவேற்றி அனுஷ்டிக்கும்படிவேண்டி மாணவர்களும், உத்தியோகஸ்தர்களும் வேதாத்யயனம் செய்வதைக் கொண்டாடித்தனக்கு அளித்த உபசாரத்திற்கு வந்தனமளித்து ஸபையைப் பூர்த்திசெய்தார். மறுநாள் காலையில் அபிநவவ்யாஸ கனபாடிகள் ஆரண்யக உபன்யாஸத்தை முடித்தார். பண்டிதர்களுக்கு ஸம்பாவனைசெய்ய ஸபை நன்கு பூர்த்தியாயிற்று.

## திருக்கோவிலூர் பிராம்மணஸபை
## மூன்றாவது நாள் நடவடிக்கை.

21—1—29 காலை 8-மணிக்கு ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஆஸ்தானவித்வான் பிரும்மஸ்ரீ "பாஷ்யபாவக்ஞ, ஸ்மிருதிபூஷணம்" வாகூர் வெங்கட்டராமசாஸ்திரிகள் (ஆர்யதர்மம் பத்திராதிபர்) ஸ்ரீமதாசார்ய ப்ரஸாதத்தைக் கொண்டுவர பல மஹாஜனங்கள் ஒன்றுகூடி வாத்யகோஷத்துடனும், வேதபாராயணத்துடனும் ஊர்வலமாக வரவேற்று ஸபா மண்டபத்திற்குள் ப்ரவேசித்தனர். மாணவர்கள் வேதபாராயணம்செய்ய ஸ்தோத்திரத்திற்குப்பிறகு பிரும்மஸ்ரீ வெ. ஸோம தேவசர்மா அவர்கள் ஸ்ரீமதாசார்யாளின் குணகணத்தையும், ஸ்ரீமத் பண்டிதப்ரவீரது யோக்யதாம்சத்தையும் ஸபைக்கு எடுத்துக்காட்டி அன்றைய உபதேசம் செய்யும்படி ப்ரார்த்தித்து ஸ்ரீசாஸ்திரிகள் பல உபநிஷதர்த்தங்களை ரஸமாக உபதேசித்தார். பிறகு முறையே நடக்கவேண்டிய ஆரண்யகம் 3-வது ப்ரச்னம் பாக்கியையும் கனபாடிகள் உபந்யஸித்துப்பூர்த்திசெய்தனர்.

மாலை ஆஸ்தானவித்வான் ஸ்ரீ சாஸ்திரிகள் ஸபையோரை தன் இனிய, ஆச்சர்ய, பிரஸங்கத்தால் ஆனந்தக்கடலிலாழ்த்தி, காரியதர்சியால் வந்தனோபசாரத்திற்கு பொருட்பட்டு ஸபை இனிது முடிவுபெற்றது. இச்சபையே இந்த ஜில்லாவிற்கு வழிகாட்டியாயும், பின்பற்றவேண்டியதாயும் இருக்கிறது என்பதற்கு ஐயமேயில்லை. ஸபை மேன்மேலும் செழித்தோங்க! ஸாதுக்கள் ஸந்தோஷிக்க, இறைவன் அருள்புரிக சுபம்!

K. R. சுப்ரமண்யசாஸ்திரி,
காரியதரிசி.

---

# வித்யாஸாகர சரிதம்.

பரமேச்வரர் நமக்கெல்லாம் தெய்வம். அவரே நமக்கெல்லாம் பிதா. பார்வதி தேவியார் நமக்கெல்லாம் மாதா. ஆனதால் தான் "ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ" என்று காளிதாஸ மகாகவி ஸார்வபௌமரும் "ரகுவம்சம்" என்ற காவியமெழுதத்துவக்குங்கால் அந்த நூலுக்கு மங்களச்லோகமாயெழுதியிருக்கின்றனர். ஆதலின் பார்வதீ பரமேச்வரர் உலகத்திலுள்ள ஈ எறும்பு பூச்சி புழு முதல் மனிதன் வரையிலுள்ள எல்லாப்பிராணிகட்கும், மற்றுமுள்ள மரஞ்செடி கொடி புல்பூண்டு முதலான ஸமஸ்தமான ஸ்தாவரவர்க்கங்கட்கும் மாதா பிதாக்களாவர். இவ்விதம் நாமெல்லாம் உலகிலுள்ள சிருஷ்டிகளெல்லாம் ஸஹோதரத்தன்மை வாய்ந்தவர்களன்றோ!

நமக்குள் ஒவ்வொருவருக்கும் உண்மையில் ஸஹோதரத்தன்மை இருக்கிறதென்பதை செய்கையினால் காட்டிக்கொள்ள வேண்டும். அன்பு பெருகி நேசித்தல் வேண்டும். பரதனுக்கு ராமனிடம் அன்பும் நேசமும் மிகுந்தபக்தியும் குடிகொண்டிருந்தன. லக்ஷ்மண சத்ருக்னர்கட்கும் அவ்வாறே அன்பும் பக்தியும் மிகுந்திருந்தன. அந்த நான்கு ஸகோதரர்களும் ஒருவரையொருவர் நேசித்து அன்புடன் கூடியிருந்தனர். ராமரும் தம்பிளையவர் மூவரிடத்தும் அன்புடன் உயிருக்குயிராயிருந்தனர். அவ்வாறே உலக சிருஷ்டிகளிடத்தும் அன்பு மிகப்பாராட்டி வந்தனர்.

இப்பால் அவ்வாறாக தெய்வீகத்தன்மை வாய்ந்தவர் ஈச்வரசந்த்ர வித்யாஸாகரராவர். அவர் வித்தையைக்கரைகண்டவர்,

(வித்யா என்ற கடலைத்தாண்டினவர்). அவருடைய அன்னையார் ஒரு பெருந்தன்மைவாய்ந்த அன்புடன்கூடிய பெருமாட்டியாவர். மார்கழி மாதத்தில் ஒருநாள் ஸூரியன் அஸ்தமிக்குந்தருவாயில் ஒரெளியமாது தன்றோளில் ஒருகுழந்தையைத் தாங்கிக்கொண்டு வந்து வித்யாஸாகரர் தாயாரைவணங்கி "அம்மணி! குளிர்பொருக்கக்கூடவில்லை. 'போர்வையொன்று வேண்டுமென வேண்ட அவர் தமக்கென்றிருந்த ஓரானொரு போர்வையை தம்மை வணங்கி வேண்டிநிற்கும் மாதுக்களித்தனுப்பினர்! அந்த சீமாட்டியின் பெருந்தன்மையை என்னென்பீர்! தஞ்சுகம் பாராது தம்மிடம் தம்முபயோகார்த்தமாயிருந்த ஒரேயொரு போர்வையையும் ஈந்தனரே! அப்பெருந்தகையமாதின் புத்திரரேயன்றோ ஈச்வர சந்தர வித்யாஸாகரர்.

கடுங்கோடையிலொருநாள் வித்யாஸாகரர் நாலைந்து செல்வச்சிறுவர்களுடன் விநோதமாய் வார்த்தையாடிக்கொண்டு வீற்றிருந்தனர். அப்பொழுது ஒரு அந்தணச்சிறுவன் கொடும் வெய்யிலில் ஓடோடியும் வந்து நிருபமொன்றைக்கொணர்ந்து வித்யாஸாகரர்கையில் கொடுத்தனன். வித்யாஸாகரர் வியந்து மனமிரங்கி தம்முடைய பங்காவுக்கருகாமையில் உட்காருவித்து அந்தச்சிறுவனுடைய ஸௌகர்யத்தைத்தேடி கடும் வெயிலில் வந்த அவ்வந்தணனது களையை மாற்றிப் பிறகு அவன் கொணர்ந்துகொடுக்கலான நிருபத்தைப்பிரித்துப்படிக்கலாயினர். கடிதத்தின் விஷயத்தையறிந்து அவ்வேழைப்பார்ப்பனச்சிறுவனைச் சம்மானித்தனுப்பினர். வித்யாஸாகரரின் உயர்ந்த இரக்கம்வாய்ந்த பெருந்தன்மைதானென்றே !

மற்றுமொருநாள் வித்யாஸாகரர் ஹூக்ளிநதிக்கரையில் செல்லுங்கால், ஒரு மனிதன் மிகவும் துக்கமுள்ளவனாகக் காணப்பட்டான். துக்கத்தின் காரணத்தைக் கேட்டறியுங்கால், அந்த மனிதன் ஒரு பெருத்த கடனாளியென்றும், நியாயஸ்தலத்தின் (Court) மூலமாய் அவனுடைய வீடு, நஞ்சை புஞ்சை ஜங்கமங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டுப்போய்விடுமென்றும் அறிந்து, அம்மனிதனுடைய ஏராளமான கடன்தொகைகளை வட்டி, பின்வட்டி கோர்ட்டுசிலவுகள்ஸகிதம் கோர்ட்டில் செலுத்தி அவனைக் கடனிலிருந்தும் நீக்கி விடுதலை செய்தனர். (தொடரும்)

ஆஸ்திகன்.